தினமலர் நமது மலர்

வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் எண்ணில் தெரிவியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.

17.11.2026

தர்மபுரி • கிருஷ்ணகிரி

குற்றச்சாட்டு

- ஏரி நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பு
- உபரிநீர் வெளியேறுவதில் நீடிக்கும் சிக்கல்
- குறைதீர் கூட்டத்தில் கிராம மக்கள் புகார் மனு

■ தர்மபுரி, நவ. 17–

தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சரவணன் தலைமையில் நடந்தது. இதில் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 783 மனுக்களை வழங்கினர். கூட்டத்தில், சோமவரா-யன் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி முன்-னாள் பஞ். தலைவர் முருகன் தலைமையில் பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அந்த மனுவில் தெரிவித்துள்-ளதாவது:



சோமவராயன் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி பொதுமக்கள், விவசாயிகள் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்தனர்.

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி தாலுகாவுக்கு உட்பட்டது மாநகராட்சி பஞ்சாயத்து. இங்குள்ள சோமவராயன் ஏரி மூலம் மாநகராட்சி, ஏ.ஜெட்டிஹள்ளி உள்ளிட்ட கற்-றுவட்டாரப் பகுதிகளில் பல நூறு ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. இந்நிலையில், ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் நீர்வந்து கால்வாய்களில் சிலர் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து, பட்டா பெற்றும், பத்திரப்பதிவு செய்தும் விவசாயம் செய்து வருகின்றனர்.

மேலும், மழைக்காலங்களில் ஏரிக்கு நீர் வரும் பாதைகள் மற்றும் உபரி நீர் வெளியேறும் 300 அடி அகலமுள்ள பகுதியையும் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் ஏரிக்கு நீர்வரத்து பாதிக்கப்படுவதுடன், உபரி நீர் வெளியேற முடியாமல் ஏரிக்கரை உடையும் அபாயம் உள்ளது. ஏரியின் பரப்பளவு சுருங்கி நிதத் தட நீர்மட்டம் குறைந்து விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் குடிநீரு க்காக பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் வருவாய்த்துறை மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் மூலம் சோமவராயன் ஏரியை முறையாக அள வீடு செய்து, 1950ம் ஆண்டுக்கு முந்தைய வருவாய்ப் பதிவேடுகளின் அடிப்ப டையில் நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை பாரபட்சமின்றி அகற்ற வேண்டும்.

தமிழ்நாடு நில ஆக்கி ரமிப்புச் சட்டம் உள்ளிட்ட சட்ட விதிகளின்படி நட வடிக்கை எடுத்து, ஏரியை யும் அதன் நீர்வழிப் பாதை களையும் பாதுகாக்க வே ண்டும். இவ்வாறு அவர் கள் கொடுத்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நார்த்தம்பட்டி முன் னாள் பஞ். தலைவர் கலைச்செல்வன் தலைமை யில் பொதுமக்கள் கலெக் டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அதில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

நல்லம்பள்ளி தாலுகா நார்த்தம்பட்டி, அதிய மான்கோட்டை, பாலஜங் கமனஹள்ளி ஆகிய பஞ். களில் உள்ள 100க்கும் அதிகமான பொது மக்க ளுக்கு கடந்த 2 ஆண்டுக ளுக்கு முன் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப் பட்டது. ஆனால் இதுவரை தங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டா விற்கான இடத்தை வருவாய் துறையினர் அளந்து தராமல் உள்ளனர்.

இது தொடர்பாக பல முறை வருவாய்த் துற யினருக்கு மனு கொடுத்த போதும் இதுவரை நடவ டிக்கை எடுக்கவில்லை. இதனால் இலவச வீட்டு மனை பட்டா வழங்கிய இடத்தில் தாங்கள் வீடு கட்டி பயன்படுத்த முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நிர் வாகம் தங்களுக்கு வழங் கப்பட்ட இலவச வீட்டு மனை பட்டாவுக்கான இட த்தை அளந்துக்காட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப் பட்டுள்ள பொதுமக்கள் மனுவில் தெரிவித்துள்ள னர்.

மை பாரத் கேந்திரா சார்பில் நடந்த இளையோர் பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாநில அளவில் தேர்வான கல்லூரி மாணவர்களுக்கு கலெக்டர் தீனேஷ்குமார் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

குறைதீர் கூட்டத்தில் 1,799 மனுக்கள் குவிந்தன

■ கிருஷ்ணகிரி, நவ. 17

கிருஷ்ணகிரிகலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் கலெக்டர் தினேஷ்குமார் தலைமையில் நடந்தது.

இதில், வீட்டுமனைப் பட்டா, வீடு, இலவச தையல் எந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் 1,799 மனுக்கள் அளித்தனர்.

மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர், தகு தியான மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலு வலர்கள் உடனடியாக நட வடிக்கை எடுக்க அறி வுறுத்தினார். தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளுக் கான சிறப்பு குறைதீர் முகாமில் மனுக்களை பெற்றுக்கொண்டார்.

மேலும், மை பாரத் கேந்திரா சார்பில் கடந்த அக்.31 மற்றும் நவ.1ல் நடந்த இளையோர் பாரா ளுமன்ற நிகழ்ச்சிகளில் சிறப்பாக செயல்பட்டு, மாநில அளவில் தேர்வான 9 கல்லூரி மாணவ, மாண வி களுக்கு பாராட்டுச் சான் றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இலவச ஆடு வழங்க க்கோரி மனு: மக்கள் குறை தீர் கூட்டத்தில் வெற்றி மகளிர் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடுகள் வழங்கக்கோரி ஏராளமான பெண்கள் மனு அளிக்க வந்திருந்தனர். தேன்க னிக்கோட்டை, சூளகிரி, ஒசூர், கெலமங்கலம், ராய க்கோட்டை, ஊத்தங்கரை, பர்கூர், மத்தூர், காவே ரிப்பட்டணம், வேப்பனப் பள்ளி உள்ளிட்ட மாவட் டத்தின் பல்வேறு பகுதி களில் இருந்து பெண்கள் திரண்டு வந்து, தங்களுக்கு 5 ஆடுகள் வழங்கி வாழ் வாதாரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதில் டி.ஆர்ஓ மஞ்சுளா, தனித்துணை கலெக்டர் அபிநயா உள்ளிட்ட அனை த்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர். கலெக்டர் அலுவலக வளாகத்தில், தனியார் தொண்டு நிறு வனங்கள் சார்பில் மனு அளிக்க வந்த பொதுமக் களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

பாலக்கோடு சர்க்கரை ஆலையில் அரவை பணி தொடங்க வலியுறுத்தி தொழிலாளர்கள் போராட்டம்

■ பாலக்கோடு, நவ. 17

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடில் 50 ஆண் டுகளாக இயங்கி வரும் கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஒரு காலத்தில் ஆண்டுக்கு 4 லட்சம் டன் கரும்புகளை தொடர்ந்து 7 மாதங்கள் அரவை செய்து சாதனை படைத்துள்ளது. ஆனால், நாளடைவில் ஆலையின் செயல்திறன் படிப்படியாக குறைந்து, இப்போது ஆண் டுக்கு 50 ஆயிரம் டன் கரும்பைக்கூட அரவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப் படுகிறது.

பெயரளவிற்கு ஒரிரு நாட்கள் அரவை தொடங் கப்பட்டு, பின்னர் உட ன டியாக நிறுத்தப்படுவதாக தொழிலாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இந்த சர்க்கரை ஆலையை நம்பி வாழும் தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள், லாரி டிரை வர்கள் என ஒரு லட்சத் துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், விவசாயிகளிடம் தேவையான அளவு கரும்பு பதிவு செய்யாதது, விதைக் கரும்பு வழங்காதது, கொள் முதல் செய்த கரும்புக்கான தொகையை உரிய காலத் தில் வழங்காதது உள்ளிட்ட நிர்வாகத்தின் செயல்பாடு களால் விவசாயிகள் பாதிக் கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குறிப்பாக, கரும்பு களை உரிய மாதங்களில் அறுவடை செய்யாமல், பூ பூத்து கரும்பு காய்ந்த பின்னர் கொள்முதல் செய் வதால் எடை குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் பல விவசாயிகள் கரும்பு சாகுபடியை கைவிட்டு மாற்றுத் தொழில்களுக்கு சென்றதால், இப்பகுதியில் கரும்பு சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்துள்ளது. இந்த நிலையில், நடப் பாண்டு விளைவிக்க ப் பட்டுள்ள கரும்புகளை உரிய காலத்தில் அறுவடை செய்து, சர்க்கரை ஆலை யின் அரவைப் பணிகளை தொடங்க வேண்டும் என தொழிலாளர்கள் தொட ர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், இப்பகுதியில் விளைவிக்கப்பட்ட கரும் புகளை வேறு சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பி விட்டு, நடப்பாண்டு பால க்கோடு ஆலையில் அரவைப் பணிகளை நிறுத்த நிர்வாகம் திட்ட மிட்டுள்ள தாக கூறப்படு கிறது. இதனை கண்டித்து நேற்று காலை பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை யில் 100க்கும் அதிகமான தொழிலாளர்கள் உள்ளி ருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, அரவை பணிகளை தொடங்க நட வடிக்கை எடுக்காத ஆலை நிர்வாகத்தை கண்டித்து முழக்கங்களை எழுப்பி னர். தமிழக அரசு உடன டியாக தலையிட்டு, நடப்பு பருவத்திலேயே பாலக் கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைப் பணி களை தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும் என தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.



பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை பணிகளை உடனடியாக தொடங்க வலியுறுத்தி தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

ரூ.11.36 லட்சத்துக்கு பட்டுக்கூடு விற்பனை

■ தர்மபுரி, நவ. 17–

தர்மபுரி பட்டுக்கூடு விற்பனை அங்காடியில் பட்டுக்கூட்டுக்கு கட்டுப் படியான விலை குறைத்து வருகிறது. இதனால் தமி முகத்தின் பல்வேறு பதிவு களை சேர்ந்த பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள், தர்மபுரி பட்டுக்கூடு விற்பனை அங்காடிக்கு தாங்கள் உற் பத்தி செய்யும் பட்டுக் கூட்டை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

நேற்று தர்மபுரி பட்டுக் கூடு விற்பனை அங்காடி க்கு 26 பட்டுக்கூடு உற்பத் தியாளர்கள் 1,536 கிலோ 750 கிராம் பட்டுக்கூடு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இங்கு ஒரு கிலோ பட்டுக்கூடு அதிகபட்சமாக 848 ரூபாய்க்கும், குறைந் தபட்சமாக 339 ரூபா ய்க் கும், சராசரியாக 739க்கும் என மொத்தம் 11 லட்சத்து 36 ஆயிரத்து 287 ரூபாய்க்கு விற்பனையானது. இதன் மூலம் அரசுக்கு 17 ஆயி ரத்து 38 ரூபாய் வருவாய் கிடைத்தது.

மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்

ஓசூரில் நாளை உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

■ ஓசூர், நவ. 17–

கிருஷ்ணகிரி கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது,

தமிழக அரசின் உத்தரவின்படி, மக் களை நாடி மக்கள் குறைகளை கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண உங்களைத் தேடி, உங்கள் ஊரில் என்னும் திட்ட முகாம் நடத்தப்படுகிறது. அந்த வகை யில் மக்களின் குறைகளை கேட்டறிந்து அவர்களுக்கு அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்கு தடை யின்றி சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் நாளை (18ம் தேதி) காலை 9 மணி முதல் மதுநாள் காலை 9 மணி வரை ஒசூர் தாலுகாவில் உள்ள வருவாய் கிராமங்களில் கலெக்டர் பங்கேற்கும் உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்ட முகாம் நடைபெற உள்ளது.

மேலும் நாளை மாலை 4.30 மணிய ளவில் ஒசூர் மாநகராட்சி அலுவலகத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் பொதுமக்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயனடைய லாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

ஒசூர் கிளை

வாசவி கெடி, A.R.R.S.கில்க்ஸ் எதிரில், ஒசூர்-635109.
போன் : 04344-246671, 246672
Email-vjhokr@bankofbaroda.com

(baanknet போர்டல்கில் நடத்தப்படும் ஏலத்திற்கான செயல்திறனர்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)வை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடன்பீட்டுக் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ்

வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் வைகையை திரும்ப பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள்ளன.

திரு. **P.தமிழரசன், த/பெ. பார்த்திபன். முகவரி1:** மனை எண்: 35, மேற்கு பகுதி, பங்கஜதோட்டி கிராமம், கேலவேரப்பள்ளி ஊராட்சி, ஒசூர், மேற்கத்திய பகுதி, ஒசூர், கிருஷ்ணகிரி – 635109. மற்றும் **முகவரி 2:** கதவு எண் 3/223–2, மாரியம்மன் கோவில், அரசனாட்டி, மூகோண்டப்பள்ளி, ஒசூர் நகரம் மற்றும் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம். மற்றும் **திருமதி. ராதாஷண்முகம் க/பெ. தமிழரசன், முகவரி1:** மனை எண்: 35, மேற்கு பகுதி, பங்கஜதோட்டி கிராமம், கேலவேரப்பள்ளி ஊராட்சி, ஒசூர், மேற்கத்திய பகுதி, ஒசூர், கிருஷ்ணகிரி – 635109. மற்றும் **முகவரி 2:** கதவு எண் 3/223–2, மாரியம்மன் கோவில், அரசனாட்டி, மூகோண்டப்பள்ளி, ஒசூர் நகரம் மற்றும் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம். மற்றும் **முகவரி 3:** கதவு எண். 3/587A, பாரதி நகர், 7வது குறுக்கு, அரசனாட்டி, மூகோண்டப்பள்ளி அஞ்சல், சுடப்பாக்கம் பிளக்ஸ், ஒசூர் நகரம் மற்றும் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

A/c.No.**75140600007998, நிலுவை தொகை ரூ.23,32,424.95/- மேலும் 16.11.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.**

அசையாச் சொத்தின் கருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒசூர் சார்பதிவு மாவட்ட வரம்புக்குள், கேலவேரப்பள்ளி கிராம ஊராட்சி மற்றும் ஒசூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ள பங்கஜதோட்டி கிராமத்தில் நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. 1.சி/வே எண். 33/1, புஞ்சை பரப்பு ஹெக்டர் 0.14.0 அல்லது ஏக்கர் 0.34 சென்ட் நிலம், மதிப்பீடு ரூ. 0.30 நயாபைசா. முழு பரப்பளவு. 2.சி/வே எண். 33/2, புஞ்சை பரப்பு ஹெக்டர் 0.07.5 அல்லது ஏக்கர் 0.19 சென்ட் நிலம், மதிப்பீடு ரூ. 0.15 நயாபைசா. முழு பரப்பளவு. 3.சி/வே எண். 39/10 B, புஞ்சை பரப்பு ஹெக்டர் 0.41.0 அல்லது ஏக்கர் 1.01 சென்ட் நிலம், மதிப்பீடு ரூ. 0.80 நயாபைசா. முழு பரப்பளவு. 4.சி/வே எண். 39/11, புஞ்சை பரப்பு ஹெக்டர் 0.98.5 அல்லது ஏக்கர் 2.44 சென்ட் நிலம், மதிப்பீடு ரூ. 0.80 நயாபைசா. இந்த புதிய உட்பிரிவின் சர்வே ரூ. 39/11A, பரப்பளவு ஏக்கர் 2 .16 சென்ட் நிலம். **நான்கு எல்லைகள் :** கீழக்கு: கேலவேரப்பள்ளி ஊராட்சி சாலை, மேற்கு: தீரு. சுரேஷ் வ/மா அவர்களுக்கு சொந்தமான நிலம், வடக்கு: தீருமதி. புட்பமா அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு: சர்வே ரூ. 39/11 பகுதிக்கு மீதமுள்ள நிலம். 5.சி/வே எண். 39/10A, புஞ்சை பரப்பு ஹெக்டர் 0.34.5 அல்லது ஏக்கர் 0.85 சென்ட் நிலம், மதிப்பீடு ரூ. 0.74 நயாபைசா. முழு பரப்பளவு. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 வரையிலான இனங்களில் அடங்கிய மொத்தம் 4.55 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு **'ஸ்வர்ணபூமி பிளாட்ஸ்' (Swarnabhoomi Meadows)** என்ற பெயரில் லேஅவுட் அமைக்கப்பட்டு HNDTA, ஒசூர் மூலம் ஒப்புதல் எண். 03/2015ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் மனை எண். 35–ன் மேற்குப் பகுதியான 1000 சதுர அடி நிலம் பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டது. கிழக்கு: மனை எண். 35 கிழக்கு பகுதி, மேற்கு: மனை எண்.36, வடக்கு: மனை எண்.19, தெற்கு: 30 அடி சாலை. இந்த எல்லைக்குள் அமைந்துள்ள அனைவகை வடக்கு பக்கம் கிழக்கில் இருந்து மேற்காக 20 அடி, தெற்கு பக்கம் கிழக்கில் இருந்து மேற்காக 20 அடி. கிழக்கு பக்கம் வடக்கில் இருந்து தெற்காக 50அடி. மேற்கு பக்கம் வடக்கில் இருந்து தெற்காக 50அடி. மொத்தம் 1000 சதுரஅடி நிலப்பரப்பில் 700 சதுரஅடி அளவிற்கு 65.03 சதுர மீட்டர், பரப்பளவில் RCC கூரையுடன் கூடிய கட்டிடம். இக்கட்டிடத்தில் கதவுகள், ஜன்னல்கள் மேல் கட்டுமானங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் பிற அனைத்து வசதிகள், மேற்கூறிய மனைப்பகுதியில் சர்வே எண்.39/10 B–யின் கீழ் உட்பிரிவு எண் 39/10B1 மற்றும் புதிய உட்பிரிவு 39/23. மேற்கூறிய வீட்டின் கதவு எண். 35–W, மின்சார இணைப்பு எண். EBSC No. 08075008401, சொத்து வரி மதிப்பீடு எண். 8548. **சுவாதீன நிலை:** ஆக்கப்பூர்வமான

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 34,75,000/-	டேவணித் தொகை	ரூ. 3,47,500/-
ஏல உயர்வு தொகை	ரூ. 50,000/-		

மின் ஏல தேதி மற்றும் நேரம் **24.12.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 27.11.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 24.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **baanknet.com** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9986515814 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 16.11.2026
இடம் : ஒசூர்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா

பர்கூர் அருகே ஒற்றை யானை முகாம் கிராம மக்களுக்கு வனத்துறை எச்சரிக்கை

■ பர்கூர், நவ. 17–

பர்கூர் அருகே நேரலக் கோட்டை, பர்கூர் காப்புக் காடுகள் உள்ளன. இந்த காப்பு காடுகள், ஆந்திர மாநில வனத்தை ஒட்டி அமைந்துள்ளதால், அடிக் கடி வனவிலங்குகள் இடம் பெயர்ந்து வருவது வழக்கம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஆந்திர மாநில வனத்தில் யானை கள் கூட்டத்தில் இருந்து பிரிந்த ஒற்றை பெண் யானை, நேரலக்கோட்டை வழியாக பர்கூர் காப்பு காட்டுக்கு வந்துள்ளது. இந்த யானை, ஜெகினிகொ ல்லை கிராமத்தில் மாரியம் மன் கோயில் அருகே முகாமிட்டுள்ளது. இதனை யறிந்த வனத்துறையினர் யானையை கண்காணித்து விரட்டும் பணியை தீவிரப் படுத்தி உள்ளனர்.

இதுகுறித்து வனத்து றையினர் கூறுகையில், ஆந்திரா வனத்தில் யானை கள் கூட்டத்தில் இருந்து பிரிந்த பெண் யானை, பர்கூர் காப்பு காட்டுக்கு வந்துள்ளது. அந்த யானை மீண்டும் தனது கூட்டத்தில் சென்று சேர முடியாமல் உள்ளது. யானையின் நட மாட்டத்தை கண்காணித்து வருகிறோம். நேரலக்கோ ட்டை காப்புக்காடு வழி யாக ஆந்திர வனத்திற்கு ஒற்றை யானை விரட்டப் பட்டு, அதன்கூட்டத்துடன் சேர்க்க முயற்சித்து வருகி றோம். கிராம மக்கள், விவசாயிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். குறிப் பாக, இரவு நேரங்களில் வனப்பகுதியை ஒட்டி யுள்ள விவசாய நிலங்களில் விவசாயிகள் யாரும் தங்க வேண்டாம். வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு ஆடு மாடுகளை மேய்ச்ச லுக்கு அழைத்து செல்ல வேண்டாம் என்றனர்.



பர்கூர் அருகே ஜெகினி கொல்லை கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் சுற்றிவரும் ஒற்றை யானை.

வாலிபர் உட்பட 2 பேர் தற்கொலை

■ கிருஷ்ணகிரி, நவ. 17–

கிருஷ்ணகிரி பழையபேட்டை அப்பண்ணாராவ் தெருவை சேர்ந்தவர் கிருபாகர் (30). இவர் ஒரு ரில் உள்ள தனியார் டிராக்டர் ஷோரூமில் மேலாளராக பணியாற்றி வந்தார். இவருக்கு கடன்சுமை அதிகமாக இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் கடந்த சில நாட்களாக விரக்தியுடன் இருந்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கிருபாகரன் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து அவரது மனைவி நந்தினி கொடுத்த புகாரின் பேரில் கிருஷ்ணகிரி டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின் றனர். ஒசூர் அருகே சிகரலப்பள்ளி கேட் பகுதியை சேர்ந்தவர் சின்ன முனியப்பா (50). இவரது மனைவி நாகம்மா (எ) கவுரம்மா (34). இவர்களுக்கு திரும ணமாகி 20 ஆண்டுகள் ஆகிறது. 4 குழந்தைகள் உள்ளனர். கணவன் மனைவி இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டு வந்தது. இதனால் மனமு டைந்த நாகம்மா விஷம் குடித்து விட்டார். உயிருக்கு போராடிய அவரை அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஒசூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். ஆனால் செல்லும் வழியி லேயே அவர் பரிதாபமாக இறந்தார். இது குறித்து பேரிகை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.